# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண்.208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை–600 106
தொலைபேசி எண் : 2363 5010, 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் – tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in


## செய்தி வெளியீடு

<u>செய்தி வெளியீடு எண் **35/2019**</u> <u>நாள் **24.12.2019**</u>

<u>**சாதாரண உள்ளாட்சித் தேர்தல்–2019**</u>

சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் தென்காசி மாவட்டங்களைத் தவிர்த்து ஏனைய 27 மாவட்டங்களில் உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 27.12.2019 மற்றும் 30.12.2019 ஆகிய நாட்களில் இரண்டு கட்டமாக தேர்தல் நடைபெற உள்ளது. வாக்குப்பதிவு முடிவடையும் நேரத்திற்கு முன்பாக 48 மணி நேரம் மது விற்பனையை நிறுத்தி வைப்பதற்காக முதல் கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் பகுதிகளில் 25.12.2019 மாலை 05.00 மணி முதல் 27.12.2019 மாலை 05.00 மணி வரையிலும், இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் பகுதிகளில் 28.12.2019 மாலை 05.00 மணி முதல் 30.12.2019 மாலை 05.00 மணி வரையிலும் மற்றும் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாளான 02.01.2020 அன்றும், தேர்தல் நடைபெறும் பகுதிக்கு 5 கிலோமீட்டர் சுற்றளவில் உள்ள பகுதிகளிலும் F2 முதல் F11 வரையான உரிமம் வழங்கப்பட்ட அனைத்து மதுபானக்கடைகள் (FL6 தவிர்த்து) மூடியிருக்க மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை தனது அரசாணை எண் 53, நாள் 19.12.2019ல் உத்தரவிட்டுள்ளது.

எனவே, தேர்தல் நடைபெறும் பகுதிகளிலும் அதனை சுற்றியுள்ள 5 கிலோமீட்டர் சுற்றளவில் உள்ள பகுதிகளிலும், பீர், ஒயின் மற்றும் இந்திய தயாரிப்பு மதுபானங்கள் விற்பனை செய்வதோ அல்லது அதனை இப்பகுதிகளில் எடுத்துச் செல்வதோ தடை செய்யப்பட்டுள்ளது. மீறுபவர்கள் மீது உரிய சட்டம் மற்றும் விதிகளின்படி பறிமுதல் செய்ய காவல் துறையினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)

24/12/19

மக்கள் தொடர்பு அலுவலர்